பண்ணை வீடுகளில்

கண்காணிப்பு கேமரா வைக்க போலீஸ் அறிவுரை

▶ கிணத்துக்கடவில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் பேரூர் சரக டிஎஸ்பி சிவக்குமார் தலைமையில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கிணத்துக்கடவு, மே 9: கிணத்துக்கடவு சுற்று வட்டார பகுதியில் உள்ள தோட்டங்களில், வீடுகள் மற்றும் பண்ணை வீடுகளும், தோட்டங்களுக்கு அருகில் குடியிருப்புகளும் அதிகமாக உள்ளது. இங்கு திருட்டு சம்பவங்கள் நடக்காமல் தவிர்ப்பதற்காக கிணத்துக்கடவு பகுதியில் உள்ள விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கிணத்துக்கடவில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பேரூர் சரக டிஎஸ்பி சிவக்குமார் தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர் பாரத நேரு முன்னிலையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வால்பாறையில்

மக்கள் தொடர்பு முகாம் தேதி மாற்றம்

கோவை, மே 9: கோவை மாவட்டம் வால்பாறை வட்டம் ஆனைமலை குன்றுகள் கிராமம், வால்பாறை நகராட்சி சமுதாய கூடத்தில் 14.05.2025 அன்று நடைபெற இருந்த மக்கள் தொடர்பு முகாம் நிர்வாக நலன்கருதி 15.05.2025 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது.

கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமார் தலைமை தாங்குகிறார். எனவே, 15.05.2025 அன்று வால்பாறை வட்டம், ஆனைமலை குன்றுகள் கிராமத்தில் உள்ள நகராட்சி சமுதாய கூடத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ள மக்கள் தொடர்பு முகாமில் பொதுமக்கள் தங்கள் குறைகளை மனுவாக கொடுக்கலாம், உரிய தீர்வு காணப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளஸ்-2 பொதுத்தேர்வில்

கோவை மாவட்டம் 97.48 சதவீதம் தேர்ச்சி

கோவை, மே 9: கோவை மாவட்டம் பிளஸ்-2 பொதுத்தேர்வில் 97.48 சதவீதம் தேர்ச்சியுடன் மாநில அளவில் 4-வது இடம் பிடித்துள்ளது.

தமிழ்நாட்டில் பிளஸ்-2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 3-ம் தேதி தொடங்கி, 25-ம் தேதியுடன் நிறைவு பெற்றது. இந்த தேர்வை கோவை மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள், நகராட்சி பள்ளிகள், தனியார் பள்ளிகள் என 364 பள்ளிகளை சேர்ந்த 16 ஆயிரத்து 135 மாணவர்கள், 18 ஆயிரத்து 902 மாணவியர் உள்பட 35 ஆயிரத்து 37 பேர் தேர்வை எழுதினர். இதைத்தொடர்ந்து, தேர்வுக்கான விடைத்தாள் திருத்தும் பணியானது நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, தேர்வு முடிவுகள் நேற்று காலை வெளியானது.

இதில், கோவை மாவட்டத்தில் 15,579 மாணவர்கள், 18,576 மாணவிகள் என மொத்தம் 34,155 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 96.55, மாணவிகளின் தேர்ச்சி சதவீதம் 98.28 ஆகும். மாவட்டத்தில் மொத்தம் 97.48 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது கடந்த ஆண்டை விட 0.51 சதவீதம் அதிகமாகும். தவிர கோவை மாவட்டம் கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து 4-வது இடத்தை பிடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், பிளஸ்-2 பொதுத்தேர்வை 114 அரசு பள்ளிகளை சேர்ந்த 3,742 மாணவர்கள், 4,941 மாணவிகள் என 8,683 பேர் எழுதினர். இவர்களில் 3,450 மாணவர்கள், 4,741 மாணவிகள் என மொத்தம் 8,191 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 94.33 ஆகும். மேலும், ஆதிதிராவிட பள்ளியை சேர்ந்த 14 மாணவ, 21 மாணவிகள் என 35 பேர் தேர்வு எழுதினர். இவர்கள் 35 பேரும் தேர்ச்சி அடைந்துள்ளனர். மாநகராட்சி பள்ளியை சேர்ந்த 558 மாணவர்கள், 1079 மாணவிகள் என மொத்தம் 1,637 பேர் தேர்வு எழுதினர். இவர்களில் 1,556 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாநகராட்சி பள்ளிகளின் தேர்ச்சி சதவீதம் 91.76 ஆகும். அரசு உதவி பெறும் பள்ளியை சேர்ந்த மாணவர்கள் 3,047 பேர் தேர்வு எழுதியதில், 2972 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 97.54 ஆகும். மெட்ரிக் பள்ளி மாணவர்கள் 17,288 பேர் தேர்வு எழுதியதில் 17,133 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 99.58 ஆகும்.

கோவை மாநகராட்சி பள்ளிகள்: கோவை மாநகராட்சி சார்பில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 148 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இதில், 17 பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகும். இப்பள்ளிகளில், கடந்த கல்வியாண்டில் படித்த மாணவர்கள் 540 பேர், மாணவிகள் 1,103 பேர் என மொத்தம் 1,643 பேர் பிளஸ் 2 தேர்வு எழுதினர். இவர்களில், மாணவர்களில் 493 பேர், மாணவிகளில் 1,067 பேர் என மொத்தம் 1,560 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்கள் 91.30 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவிகள் 96.74 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்தமாக 94.95 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது, கடந்த ஆண்டை விட 2.98 சதவீதம் கூடுதல் ஆகும். கடந்த ஆண்டில் தேர்ச்சி விகிதம் 91.97 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மொத்தமுள்ள 17 மேல்நிலைப்பள்ளிகளில் ஆர்.எஸ்.புரம் மேற்கு மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது. இப்பள்ளியில் தேர்வு எழுதிய 189 மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதேபோல், ராமநாதபுரம் ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது. இங்கு, தேர்வு எழுதிய 84 மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மீதமுள்ள பள்ளிகளில், 10 பள்ளிகள் 90 சதவீதத்துக்கும் அதிகமாக தேர்ச்சி பெற்றுள்ளன. ஒக்கிலியர் காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, பீளமேடு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, அரங்கநாதபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி, வெங்கிட்டாபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆகிய 5 பள்ளிகள் 90 சதவீதத்திற்கும் குறைவாக தேர்ச்சி பெற்றுள்ளன.

மொத்தமுள்ள 17 பள்ளிகளில் ஆர்.எஸ்.புரம் மேற்கு மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ராமநாதபுரம்ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவை 100 சதவீதம் தேர்ச்சி பெற்று முதலிடம் பிடித்துள்ளன. வெங்கிட்டாபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி 83.87 சதவீதம் தேர்ச்சி பெற்று, கடைசி இடத்தை பிடித்துள்ளது.

மாநில அளவில் 4—வது இடம்

19 அரசு பள்ளிகள் 100% தேர்ச்சி

கோவை மாவட்டத்தில் 19 அரசு பள்ளிகள் நூறு சதவீத தேர்ச்சியை பெற்றுள்ளனர். அதன்படி, பொள்ளாச்சி காளியண்ணன்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி, முத்துகவுண்டனூர் அரசு மேல்நிலைப்பள்ளி, கோமங்கலம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி, வால்பாறை அரசு மேல்நிலைப்பள்ளி, புரவிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, கோட்டூர் பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளி, புங்கம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, வெள்ளியங்காடு அரசு மேல்நிலைப்பள்ளி, ஓமபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, நாயக்கன்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, ஜெ.கிருஷ்ணாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, கோவை மாடல் அரசு மேல்நிலைப்பள்ளி, சுண்டக்காமுத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, நரசிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, அன்னூர் அரசு மேல்நிலைப்பள்ளி, வெள்ளமடை அரசு மேல்நிலைப்பள்ளி, அரசூர் அரசு மேல்நிலைப்பள்ளி, கெம்மநாயக்கன்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் காங்கேயம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 19 அரசு பள்ளிகள் நூறு சதவீத தேர்ச்சி பெற்றுள்ளன. தவிர, 64 அரசு பள்ளிகள் 90 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சி அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இரும்பு கேட் சரிந்து விழுந்து சிறுவன் படுகாயம்

கோவை, மே 9: விளையாடி கொண்டு இருந்த போது இரும்பு கேட் சரிந்து விழுந்து சிறுவன் படுகாயம் அடைந்தது குறித்து போலீசார் கடை உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கோவை கணபதிப்புதூரை சேர்ந்தவர் சிவராஜ். இவரது மனைவி உதயபிரியா (28). இவர்களுக்கு 8 வயதில் மகன் உள்ளார். இந்த நிலையில், 8 வயது சிறுவன் வீட்டின் அருகே உள்ள எலக்ட்ரிக்கல் கடை முன் விளையாடி கொண்டு இருந்தார். அப்போது, அங்கிருந்த இரும்பு கேட் திடீரென சரிந்து சிறுவன் மீது விழுந்தது. அதில், சிறுவனின் இடது கால் எலும்பு முறிந்தது.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் சிறுவனை மீட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அப்போது, கடையின் உரிமையாளர்கள் கோவிந்தராஜ் மற்றும் சிவானந்தம் ஆகியோர் சிறுவனின் மருத்துவ செலவுக்கு பணம் தருவதாக கூறியுள்ளனர். ஆனால், அவர்கள் பணம் தராமல் ஏமாற்றியதாக தெரிகிறது.

இதுகுறித்து சிறுவனின் தாய் உதயபிரியா சரவணம்பட்டி போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் கடை உரிமையாளர்கள் கோவிந்தராஜ் மற்றும் சிவானந்தம் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விண்ணளந்த காமாட்சியம்மன் கோயிலில் சித்ரா பவுர்ணமி திருவிழா துவக்கம்

பொள்ளாச்சி, மே 9: பொள்ளாச்சி கோட்டூர் ரோட்டில் உள்ள விண்ணளந்த காமாட்சியம்மன் கோயிலில், சித்ரா பவுர்ணமி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கப்பட்டது.

பொள்ளாச்சி கோட்டூர் ரோட்டில் உள்ள ஸ்ரீவிண்ணளந்த காமாட்சியம்மன் உடனமர், ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் சித்ரா பவுர்ணமி விழாவையொட்டி, நேற்று கணபதிஹோமம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து கோயில் வளாகத்தில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். வரும் 11ம் தேதி ரயில்வே ஸ்டேஷன் எதிரே உள்ள சமயபுரம் மாரியம்மன் கோயிலில் இருந்து கும்பஸ்தாபனம் செய்து அழைத்து வரும் நிகழ்ச்சியும், அதன்பின், அம்மனுக்கு சிறப்பு அபிஷேக பூஜையும் நடக்கிறது. தொடர்ந்து 12ம் தேதி காலையில் முளைப்பாரி, மாவிளக்குடன், பக்தர்கள் சீர் தட்டு கொண்டுவரும் நிகழ்வு நடக்கிறது.

பின்னர், விண்ணளந்த காமாட்சியம்மனுக்கும், ஏகாம்பரரேஸ்வரருக்கும் திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சி நடக்கிறது. அதன்பின், மாலை 5 மணிக்கு திருவிளக்கு பூஜையும் நடைபெறுகிறது.

பொள்ளாச்சி நகராட்சி

தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள்

பொள்ளாச்சி, மே 9: பொள்ளாச்சி அழகாபுரி வீதியில் நேற்று, நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் தனியார் தூய்மை பணியாளர்களுக்கு கையுறை, தலை கவசம் மற்றும் பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கு, நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் தலைமை தாங்கி, தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்களை வழங்கினார். நகராட்சி ஆணையாளர் கணேசன் முன்னிலை வகித்தார். நகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

▶ பொள்ளாச்சி நகராட்சி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் வழங்கினார். நகராட்சி ஆணையாளர் கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொள்ளாச்சி சூளேஸ்வரன்பட்டி கருப்பராயசாமி கோயில் தேர்த்திருவிழா

பொள்ளாச்சி, மே 9: பொள்ளாச்சி அருகே சூளேஸ்வரன்பட்டியில் உள்ள கருப்பராயசாமி கோயில் திருவிழா நடைபெற்றது. இதில், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பொள்ளாச்சி அருகே சூளேஸ்வரன்பட்டி அழகப்பா காலனியில் உள்ள கருப்பராயசாமி கோயில் திருவிழா, கடந்த மாதம் 22ம் தேதி நோன்புசாட்டுதலுடன் துவங்கப்பட்டது. 30ம் தேதி முதல் 5ம் தேதி வரையிலும் நந்தா தீப வழிபாடு நடைபெற்றது. கடந்த 6ம் தேதியன்று காளியம்மன் கோயிலிருந்து தீர்த்தம் கொண்டு வரப்பட்டது. நேற்று முன்தினம் 7ம் தேதி மாலையில் பொங்கல் வழிபாடும், கருப்பராயசாமிக்கு சிறப்பு அபிஷேக பூஜையும் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து அன்று இரவில் சிறப்பு பூஜை வழிபாடு நடைபெற்றது. பின் சுமார் 12 அடி உயரத்தில் சிற்ப வடிவமைப்பில் மரத்தாலான தேர் திருவிழா நடைபெற்றது. இந்த தேரானது, அழகப்பா காலனி உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கோயிலை வந்தடைந்தது. இதில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு தேரை இழுத்து வந்தனர்.

▶ பொள்ளாச்சி அருகே சூளேஸ்வரன்பட்டி அழகப்பா காலனியில் உள்ள கருப்பராயசாமி கோயில் தேர்த்திருவிழா விமர்சையாக நடைபெற்றது.

சாலை விபத்தில் 2 வாலிபர்கள் பலி

கோவை, மே 9: கோவையில் வெவ்வேறு இடங்களில் சாலை விபத்தில் 2 வாலிபர்கள் பலியானது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

கோவை தடாகத்தை சேர்ந்தவர் பரத்குமார் (19). இவர், தனது பைக்கில் லாலி ரோடு பகுதியில் வந்து கொண்டு இருந்தார். அப்போது, அந்த வழியாக வந்த ஜீப் திடீரென கட்டுப்பாட்டை இழந்து பரத்குமார் மீது மோதியது. இதில், தூக்கி வீசப்பட்ட பரத்குமார் பலத்த காயம் அடைந்தார். அவரை அக்கம், பக்கத்தினர் மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார்.

அதே போல, கோவை பிளன் புதூர் கோகுலம் காலனியை சேர்ந்தவர் புகழேந்தி (21). இவர், தனது நண்பர் அதே பகுதியை சேர்ந்த சரண் (22) என்பவருடன் பைக்கில் வடவள்ளியில் இருந்து கணுவாய் ரோட்டில் சென்றார். பைக்கை சரண் ஓட்டினர்.

அப்போது, பைக் திடீரென கட்டுப்பாட்டை இழந்து கணுவாய் பகுதியில் இருந்த மின் கம்பத்தில் மோதியது. இதில், இருவரும் தூக்கி வீசப்பட்டு புகழேந்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பலத்த காயம் அடைந்த சரணை அக்கம் பக்கத்தினர் மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். இது குறித்து மேற்கு போக்குவரத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை - BROADWAY CINEMAS | INOX PROZONE MALL | ALVEAL FUN SAVY
MIRAJ CINEMAS | CINEPOLIS | COSMO CINEMAS
ஆவாரம்பாளையம் - ஸ்ரீசக்தி வேலன் | ஈரோடு - SRI SAKTHI CINEMAS | மதுரை - ஸ்ரீ சண்முகா | திருப்பூர் - SRI SAKTHI CINEMAS | KSB CINEPLEX | சிவகங்கை - வரதராஜ் | பல்லடம் - ARNOTHAYA CINEMAX | கோபி - ZEON CINEMAS
தாராபுரம் - SRI SAKTHI CINEMAS | அன்னூர் - ஸ்ரீ விநாயகா | அந்தியூர் - SAI SINDHU CINEMAS

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
முன்னதாக முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றழைக்கப்பட்டது
பதிவு அலுவலகம்: 6-வது தளம், பி-பிங்க், சங்கா ட்ரூனோ, வேலுச்சேரி, புனே-411014

கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நியமத்தின் முன்னாள் முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று பெயர் 17 நவம்பர் 2023 முதல் கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என மாற்றப்பட்டது. முன்பு மால்வா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது மற்றும் முதலில் GE மனி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் பொது வரையறுக்கப்படாத நிறுவனமாக இணைக்கப்பட்டது இனி கடன் வழங்கியவர் என குறிப்பிடப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பெருநிறுவன / பதிவு அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருக்கிறபடியால், கடனீட்டுச் செத்துவை செலுத்தாதது மற்றும் நிதிச் செத்துவை வழங்காதது மற்றும் கடனீட்டுச் செத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 இனி "சட்டம்" என குறிப்பிடப்படும் கீழ் மற்றும் கடனீட்டுச் செத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி-3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12)-ன் கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் கோரிக்கை அறிவிப்பினைக் இழக்கவரும் கடன்தாரருக்கு அறிவிப்பு கீழே குறிப்பிட்டுள்ள தொகையை அதன்மீதுள்ள விட்டத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருக்கிறார். கடன்தாரர்கள் தொகையை திருப்பி செலுத்தத் தவறினால் கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பு மாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டுச் செத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002, விதி 13(4) கீழும் அதனுடன் கடனீட்டுச் செத்து பயனாளர்களுக்கு விதிகள் 2002, விதி 8-கீழும் கீழுள்ள நன் அதிகாரங்களைப் பயன்படுத்தி மே 05, 2025 அன்று கீழே விவரிக்கப்பட்ட செத்தினை, கலந்தாய் செய்துள்ளார்.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவது என்னவென்றால், அச்செத்துக்களின் மீது எந்தவொரு பேரிலோ ஒப்பந்தமோ செய்ய வேண்டாம். மீறினால், அது மேற்படிப்பட்ட கடன்வழங்கியவருக்கு, செத்தின் மீதான தொகையை அதற்குரிய வட்டி ஆகியவற்றோடு செலுத்து எடுப்பிக்கத்தகு உட்பட்டது ஆகும். மேற்படிப்பட்ட கட்டத்தின் பிரிவு 13 மற்றும் துணைப் பிரிவு (8)-ன் துணைப் பிரிவுகளின் கீழுக்கு உட்பட்டுள்ள செத்துவை மீட்பதற்கான தங்கட்டுள்ள கால அவகாசத்தில் தெரிந்துகொள்ளுமாறு கடன்தாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கலந்தாய் செய்யப்பட்டுள்ள செத்தின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்(கள்) பெயர்	செத்து விவரங்கள்	கலந்தாய் செய்த நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	கோரிக்கை அறிவிப்பு மதிப்பு (ரூ.)
1	D லக்ஷ்மாவதி, பிரபு துரைராஜ் (காலஞ்சென்றவர்) அவர்களின் தாய், பிரபு துரைராஜ் (காலஞ்சென்றவர்) அவர்களின் தெரியாத சட்டப்படியான வாரிசுகள்	கோயம்புத்தூர் மதிப்பு மாவட்டம், சிங்காநல்லூர் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, சிங்காநல்லூர் கிராமத்தில் வசித்து வரும் புல எண்.A-சிங்காநல்லூர்-இன்பா பிளாக் எண் 10, SF எண் 55, குறியீடாகும் உட்பிரிவு எண் 55/1, பரப்பளவு 2.50 ஏக்கர் மற்றும் SF எண் 37, குறியீடாகும் உட்பிரிவு எண் 37/1, பரப்பளவு 3.17 ஏக்கர், மொத்தப் பரப்பளவு 5.67 ஏக்கர், இதிலடங்கிய பரப்பளவு 1.46 ஏக்கர் கொண்ட நிலங்கள் "ஸ்ரீராம் நகர்" என பெயரிடப்பட்டு லேஅவுட்டாக பிரிக்கப்பட்டது. இதிலடங்கிய மனை எண் 72A மற்றும் மேற்படி மனை கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகம் 24.07.2007 தேதியிட்ட NAKA.NO.9889/2006/EH-இல் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது, பரப்பளவு 1856 சதுர அடி மற்றும் அந்த முன்பொறியப்பட்ட கட்டட கட்டுமானம் உட்பட. இது பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது. வடக்கு: ஏற்கனவே விற்கப்பட்ட சொத்து. தெற்கு: 30 அடி அகலத்து-மேற்கு லேஅவுட் சாலை. கிழக்கு: மனை எண்.72. மேற்கு: மனை எண்.75.	05.05.2025	18.02.2025	கடன் எண். HL001180000000050104 16.02.2025 தேதியுடன் ரூ.913429.43/- (ரூபாய் ஒன்பது லட்சத்து பதினாலாயிரத்து நானூற்று இருபத்தொன்பது மற்றும் சான் நாற்பது மூன்று மட்டும்) மொகையைத் திருப்பி செலுத்தும் காலம் வரையான கூடுதலான ஆண்டுக்கு 14.50% வட்டி உட்பட...

இடம்: கோயம்புத்தூர், தேதி: 09.05.2025 — ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் முன்னதாக முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றழைக்கப்பட்டது

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
முன்னதாக முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றழைக்கப்பட்டது
பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டிடம், சங்கா ட்ரூனோ, வேலுச்சேரி, புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அமைப்பு: எண் 1510, 2-ஆவது தளம், ஸ்ரீ காம்பிளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018.
மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
அசையா சொத்துக்கள் விற்பனை
கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரப்பதிவாளர் மற்றும் தீர்த்த சொத்துகளை வழிநடத்தும் வேறு கடனீட்டுச் செத்து உரிமை அமலாக்கச் சட்டம், 2002 வேறு கடனீட்டுச் செத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) & கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் முன்னதாக முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றழைக்கப்பட்டது. முனாலால் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று பெயர் கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது முன்னதாக மல்வா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மனி